IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.83/2023

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | MAGENTHIRAN |
| FATHER'S NAME | : | GOVINTHASAMY |
| VILLAGE | : | KZHMUTUKOOR |
| OCCUPATION | : | EX SERVICE MAN |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 14th day of AUGUST 2025.

**<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>**

எதிரிகள்2–8 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை குவிமுச 317 கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கீழ்முட்டூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். ராணுவத்தில் பணியாற்றி 2012 வருடம் பணி ஓய்வு பெற்றேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கின் 1ம் எதிரியும் தெரியும். 12.09.2020 ம் தேதி நான் என்க்கு சொந்தமான நிலத்தில் மாடு மேய்த்து கொண்டிருந்தேன். அப்போது மாலை 5.00 மணி இருக்கும். என் நிலத்தை ஓட்டி ஏரி உள்ளது.இலம் ப்ருட்ஸ் என்ற நிறுவனத்தார் கழிவு இலைகளை ஏரியில் கொட்டுவார்கள். அதை எங்களுக்கு சொந்தமான கால்நடைகள் சென்று சாப்பிடுவது வழக்கம். ஆஜர் எதிரிகள் எங்கள் கிராமத்தின் எல்லைக்கும் சமமந்தம் இல்லாதவர்கள் அப்பொழுது ஆஜர் எதிரிகள் எங்களை பார்த்து தேவிடியா பையா, ங்கோம்மா , ஏன் கால்நடைகளை ஏரியில் விடுகிறார்கள் என்று எதிரி உமாபதி , ஏழுமலை,வெங்கடேசன் , மேகநாதன் ஆகியோர் திட்டினார்கள். நான் சென்று ஏன் என்னை திட்டினிர்கள் என்று கேட்டேன்.அப்பொ ழுது ஆஜர் எதிரிகள் வாழை தண்டால் என்னையும் எனது தம்பி மனைவி அனுராதாவும் அடித்தார்கள். பின்னர் தம்பி வேலுவை அனைவரும் அடித்தார்க்ள்தம்பி மகன் திலிபை அனைவரும் அடித்தார்கள். பின்னர் ஆஜர் எதிரிகள் மீண்டும் தாக்குவதற்கு கத்தியை எடுத்து கொண்டு சுத்தினார்கள்.இதுதொடர்பாக நான் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிது., இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**எ

எங்களுக்கும் எதிரிக்கும் முன்விரோதம் இல்லை. இதை நீதிமன்றத்திற்கு எதிராக சாட்சியம் சொல்ல வந்தேன். எதிரிகள் ஊரில் பிரமுகர் என்றும் திருவிழாக்களில் தலைமை தாங்குவார் என்றால் சரிதான். நானும் தலைமை தாங்குவேன்.கம்பெனியில் இருந்து கழிவு வெளியேறுவதை மாடு சாப்பிடுவது பிரச்சனை என்றால் சரியல்ல. அதை கேட்க வந்ததால்இருவருக்கும் தகராறு ஏற்பட்டு இந்த வழக்கு சம்பவம் நடந்து என்றால் சரிதான்.எதிரிகளுக்கும் அந்த் கம்பெனிக்கும் வாக்குவாதம உள்ளது என்றால் சரிதான்.

சம்பவ தினத்தன்று நான் இல்லை என்றும் வேலுவின் மனைவி அனுராதா தான் இருந்தார் என்றால் சரியல்ல. நான் அங்கிருந்தேன். அனுராதாவை தரகுறைவாக பேசியதால் தான் நாங்கள் சென்ற கேட்டோம் என்றால் சரிதான். அப்ெ பாழுது தான் எங்களுக்கும் எதிரிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான். எங்கள் தரப்பில் 4 பேரும் எதிரிகளும் தகராறு அங்கிருந்த பொருள்களை மாறிமாறி அடித்துகொண்டோம் என்றால் சரிதான்.காவல் நிலையத்தில் அன்று இரவு 7.30 மணிக்கு புகார் கொடுத்தேன். புகார் கொடுக்கும் போது அனுராதா வந்தார். புகார் உதவி ஆய்வாளர் எழுதினார். அதில் நான் கையொப்பம் செய்தேன். அதன் பிறகு எந்த நாள் முதல் தகவல் அறிக்கை பதிய செய்யப்பட்டாத சாட்சிகள் பதிய பட்டது என்று எனக்க தெரியாது. எதிரிகளுக்–கும் எனக்கும் உள்ள முன்விரோதம காரணமாக அதை பயன்படுத்தி எதிரி மீது பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அனுராதா கணவர் கவுன்சிலர் என்றால் இல்லை. அவருடைய அதிகாரத்தை பயன்படுத்தி பொய் புகார்்தகொடுத்தேதன் என்றால் சரில்ல. நானும் அனுராதா தான் எதிரிகளை தர குறைவாக பேசினோம் என்று எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இ்லலை என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.83/2023

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | VIMAL |
| FATHER'S NAME | : | GOVINTHASAMY |
| VILLAGE | : | KOOLAIMEDU |
| OCCUPATION | : | SHOP |
| AGE | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 14th day of AUGUST 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள்2–8 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை குவிமுச 317 கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்

**முதல் விசாரணை:**

நான் தற்போது கொல்லை மேட்டில் வசித்து வருகிறேன். செல்போன் கடை நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நானும் எனது நண்பர் குமரவேலும் ஒரு நாள் சம்பவ வழியாக செல்லும்போது சத்தம் கேட்டது. அங்கு போய் பார்த்தபோது அங்கு சண்டை நடந்து கொண்டிருந்தது. அந்த இடத்தில் போலிசார் கையொப்பம் வாங்கினார்கள் அதில் நானும் குமரவேலும் சாட்சியமாக கையொப்பம் செய்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**எ

சம்பத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம்செய்தேன் என்றால் சரிதான்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.
C.C.NO.83/2023
DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | VELU |
| FATHER'S NAME | : | GOVINTHASAMY |
| VILLAGE | : | KIZHMUTUKOOR |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 14th day of AUGUST 2025.

**<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>**

எதிரிகள்2–8 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை குவிமுச 317 கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது கீழ்மூட்கூரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கின் 1–ம் எதிரி அண்ணாமலை என்பவரை தெரியும். தேதி மாதம் ஞாபகம்இல்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக நான் என் நிலத்தின் அருகே நின்றுக்கொண்டிருந்தபோது என் மனைவி அனுராதா மாடு மேய்த்து கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது. அங்கு சென்று பார்த்தபோது ஆஜர் எதிரிகள் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரிகள் என் மனைவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு கொண்டிருந்தார்கள். அங்கு ஒருவருக்கொருவர் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. என் மனைவியையும் கீழே தள்ளி விட்டார்கள். என் மனைவி அழைத்து காவல் நிலையம் சென்று என் அண்ணன் மகேந்திரன் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

பிரச்சனை எதனால் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது எதிரி எனது மனைவி மற்றும் எனது அண்ணன் வாக்குவாதம் செய்யும்போது சத்தம் கேட்டு தான் அங்கு சென்றேன் என்றால் சரிதான். இருவரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு பிரச்சனை செய்யும்போது தான் நான் சென்றேன் என்றால் சரிதான். எதிரிகள் ஊரில் முக்கிய பிரமுகர் என்றும் திருவிழாக்களில் தலைமை தாங்குவார் என்றால் சரிதான் அதில் நானும். சம்பவ நடந்த அன்றே மாலை 5.00 மணிக்கு நானும் காவல் நிலையம் சென்றேன். அ.சா.1 புகார் கொடுத்தார் அவரே எழுதினார். அதன் பிறகு என்று முதல்தகவல் அறிக்கை போடப்பட்டது மற்றும் யாரை விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. புகார் கொடுத்து வீட்டிற்கு வந்து விட்டோம் யாரும் மருத்துவமனைக்கு செல்லவில்லை. எதிரிகளுக்கும் எங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் உள்ளது. அதன் பிறகு போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். எதிரிகளுக்கும் எங்களுக்கும் முன்விரோதம் உள்ளது என்றும், முன்விரோதம் காரணமாக அவர் மீது பொய் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.83/2023

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | MAGESHWARI |
| HUSBAND NAME | : | VELU |
| VILLAGE | : | KIZHMUTUKOOR |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the $14^{th}$ day of AUGUST 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள்2–8 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை குவிமுச 317 கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்

**முதல் விசாரணை:**

நான் தற்போது கீழ்மூட்கூரில் வசித்து வருகிறேன். கூலி செய்து வருகிறேன். அ.சா.1, 2, 3 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கின் 1–ம் எதிரி அண்ணாமலை என்பவரை தெரியும். தேதி மாதம் ஞாபகம்இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக நான் கொல்லையில் மாடு மேய்த்து கொண்டிருந்தேன். நேரம் மாலை 5.00 மணி இருக்கும். எனது அண்ணி அனுராதா அங்கிருந்த கழிவு வாழை இலைகளை வாறி கொண்டு வருவதற்காக சென்றார். அப்போது அங்கு கூச்சல் சத்தம் கேட்டது. அங்கு நான் சென்று பார்த்தபோது சண்டை நடந்து கொண்டிருந்தது நான் அண்ணியை மற்றும் அண்ணனை மடக்கி அழைத்து வந்தேன். நான் சென்று பார்த்தபோது எனது அண்ணி கீழே விழுந்து இருந்தார். பார்த்தபோது இரண்டு கையின் மூட்டுகளிலும் சீராய்ப்பு காயம் இருந்தது. ஆஜர் எதிரிகள் எங்களை பார்த்து தெவிடியா என்று திட்டினார்கள். நான் எனது அண்ணியை மீட்டு குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். நானும் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். சம்பவம் தொடர்பாக அசா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**எ

பிரச்சனை எதனால் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது சத்தம் கேட்டு தான் சென்றேன். நான் அங்கு போய் பார்த்தபோது என் அண்ணி கீழே வி ழுந்து கிடந்தார் எப்படி விழுந்தார் என்று எனக்கு தெரியாது. என் அண்ணியை தூக்கிக்கொண்டு நேராக குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கிருந்து இரவு 12.30 மணிக்கு தான் வந்தேன். அதன் பின்னிட்டு மறுநாள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றோம். புகாரை மகேந்திரன். அனுராதா வேலு மற்றும் நான் ஆகியோர் புகார் கொடுத்தோம். அதன் பிறகு என்று முதல்தகவல் அறிக்கை போடப்பட்டது மற்றும் யாரை விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரிகளுக்கும் மகேந்திரன், வேலூ ஆகியோருடன் முன்விரோதம் என்றால் சரிதான். எதிரிகள் ஊரில் முக்கிய பிரமுகர் என்றும் திருவிழாக்களில் தலைமை

தாங்குவார் என்றால் சரிதான். மகேந்திரன், வேலூ எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதாரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.83/2023

DEPOSITION OF WITNESS P.W.5

| | | |
|---|---|---|
| NAME | : | CHANDRA |
| HUSBAND NAME | : | SAMINATHAN |
| VILLAGE | : | ANPOONDI |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 14th day of AUGUST 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள்2-8 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை குவிமுச 317 கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்

**முதல் விசாரணை:**

நான் தற்போது அண்பூண்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2, 3,4 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கின் 1-ம் எதிரி அண்ணாமலை என்பவரை தெரியும். தேதி மாதம் ஞாபகம்இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக நான் கொல்லையில் மாடு மேய்த்து கொண்டிருந்தேன். நேரம் மாலை 4.00-5.00 மணி இருக்கும். ஆஜர் எதிரிகள் சம்பவ இடத்தில் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது என்னையும் அடித்தார். வழக்கின் 1-ம் எதிரி அண்ணாமலை என்பவர் அடித்தார். அண்ணாமலை என்பவர் என்னை கட்டையால் உடம்பு மீது அடித்தார். அங்கிருந்த மற்ற ஆஜர் எதிரிகள் தகாத வார்த்தையால் திட்டினார்கள். தெவிடியா, நாராக்கூதி என்று திட்டினார்கள். பின்னர் அங்கு ஒருவருக்கொருவர் அடித்து கொண்டார்கள். பின்னர் சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**எ

பிரச்சனை எதனால் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது சத்தம் கேட்டு தான் சென்றேன். முதலில் பிரச்சனை எப்படி ஆரம்பமானது என்பதுஎனக்கு தெரியாது. சம்பவம் போன வருடம் நடந்தது. மகேந்திரன் வேலூ மற்றும் அனுராதா என் உறவினர்கன் என்றால் சரிதான். அவருக்கு சாதகமாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை தாக்கியதாக சொல்லப்படும் அண்ணாமலை எதிரிகளுள் ஒருவர் ஆவார். அவருக்கு 60-70 வயது இருக்கலாம். அவருடைய மகனும் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். இருதரப்பினரும் தகாத வார்த்தையால் பேசி ஒருவருக்கொருவர் தாக்கினார்கள் என்றால் சரிதான். நான் மருத்துவமனை செல்லவில்லை நேரடியாக காவல் நிலையத்திற்கு மாலை 5.00 மணிக்கு சென்றேன். வேலூ புகார் எழுதினார் நான் உடன் இருந்தேன். முதல்தகவல் அறிக்கை போடப்பட்டது மற்றும் யாரை விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது.

எதிரிகள் ஊரில் முக்கிய பிரமுகர் என்றும் திருவிழாக்களில் தலைமை தாங்குவார் என்றால் சரிதான்.மகேந்திரன், வேலூ உறவினர் என்பதால் அவருக்கு ஆதாரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.83/2023

DEPOSITION OF WITNESS P.W.6

| | | |
|---|---|---|
| NAME | : | ANURADHA |
| HUSBAND NAME | : | VELU |
| VILLAGE | : | KIZHMUTUKUR |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 14th day of AUGUST 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள்2–8 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை குவிமுச 317 கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்

**முதல் விசாரணை:**

நான் தற்போது கீழ்மூட்டுகூரில் வசித்து வருகிறேன். விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2, 3,4,5 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கின் 1–ம் எதிரி அண்ணாமலை என்பவரை தெரியும். தேதி மாதம் ஞாபகம்இல்லை. சுமார் 1 வருடங்களுக்கு முன்பாக நான் கொல்லையில் வாழை இலையை எடுத்து வர சென்றேன். மாலை 5.00 மணி இருக்கும். அந்த இடத்தில் சண்டை போட்டுக்கொண்டு கூச்சல் செய்து கொண்டிருந்தார்கள். நான் சென்று கேட்டபோது என் கணவர் எங்க என்று கேட்டு என்னை கீழே தள்ளி அடித்தார்கள். ஆஜர் எதிரிகள் தான் என்னை அடித்தார்கள். என்னை பார்த்து தெவிடியா நாராக்கூதி என்று ஆஜர் எதிரி உமாபதி வெங்கடேசன் என்பவர் திட்டினார்கள். என்னுடைய ஜாக்கெட் மற்றும் புடவை கிழித்து உமாபதி என்பவர் ஈடுபட்டார். எனக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. என்னால் எழுந்து நடக்கவே முடியவில்லை. பின்னர் என்னை மகேஷ் மற்றும் சந்திரா என்பவரும் குடியாத்தம்அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு 1 நாள் மட்டும் சிகிச்சையில் இருந்தேன். பின்னர் சம்பவம் தொடர்பாக என்னுடைய மூத்தார் மகேந்திரன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**எ

என் கணவருக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம்இல்லை. எதிரிகள் ப்ருட்ஸ் கம்பெனியில் சண்டை போடும்போது நான் போய் கேட்கும்போது பிரச்சனை வந்தது என்றால் சரிதான். நானும்எதிரிகளும் பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாரும் வந்து விட்டார்கள் என்றால் சரிதான். அப்போது தான் சந்திரா, மகேந்திரன், வேலூ மற்றும் பொதுமக்கள் வந்த உடன் தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த தள்ளுமுள்ளுலில் கீழே விழுந்து முட்டியில் அடிப்பட்டது. முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளான ஜாக்கெட்டை கிழித்த விவரம் போலிஸ் விசாரணையில் சொல்லாமல் முதல் முறையாக நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் காரணமாக ஜாக்கெட்டை கிழித்ததாக பொய்யாக புகார் கொடுத்தோம் என்றும் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தவுடன் நானாக குடியாத்தம் அரசு மருத்துவமனை சென்றேன். புகார் அன்றே கொடுத்து மருத்துவமனையில் நான் ஒரு நாள் இருந்தேன். புகார் யார் எழுதினார்கள் என்பது எனக்கு தெரியாது. முதல்தகவல் அறிக்கை போடப்பட்டது மற்றும் யாரை விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் ஊரில்முக்கிய பிரமுகர் என்றும் திருவிழாக்களில் தலைமை தாங்குவார் என்றால் சரிதான்.மகேந்திரன், வேலூ உறவினர் என்பதால் அவருக்கு ஆதாரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 14.08.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.